MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பெண்ணியம் பேசும் பழமொழி

**முனைவர்.ஜெ.விக்ரன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ நேரு மகா வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.கோவை
மின்னஞ்சல்: jai.vikram.j@gmail.com

# Feminist proverb

**Dr. J. Vikram**

**Assistant Professor, Tamil Department**
**Sri Nehru Maha Vidyalaya College of Arts and Science, Coimbatore**
**Email: jai.vikram.j@gmail.com**

## ABSTRACT

**In feminist thought, it is customary to occasionally take note of the voices of women not only in literature but also in folk tales. For this article, I compiled a total of 500 proverbs from printed research books on folk languages, generally referring to the meaning of man and woman in proverbs. These 500 are generally about the male body and the female body. Out of these, I separated only 50 proverbs that specifically talk about the male body and the female body. Out of these 50, 16 were about the male body and 2 were about the female body. The remaining 36 proverbs were about the male and female bodies in an objective way (beauty, wealth). I was surprised to find proverbs that restrict and criticize the center of power of men. This surprise was the reason for the creation of this article. The meanings that have already been determined for woman must be overturned. Feminism has arrived today within the postmodern era, where it is necessary to "deconstruct the traditional myth of women and recreate a new vision." This article systematically explains how proverbs, one of the folk traditions, provide the foundation for male hegemonic thinking and how these same proverbs serve as rebellious copies that break male hegemony, and also attempts to outline how proverbs serve as a dialogue for feminism, that is, as women's languages.**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

பெண்ணியம் குறித்த சிந்தனைகளில் பெண்களின் குரல் இலக்கியத்தில் மட்டும் அல்லாது நாட்டுப்புற வழக்காறுகளிலும் ஒலிப்பதை அவ்வப்போது கவனத்தில் வைத்துக் கொள்வது வழக்கம். இக்கட்டுரைக்காக மொத்தம் 500 பழமொழிகளை அச்சில் வந்த நாட்டுப்புற மொழிகள் குறித்த ஆய்வு நூல்களிலிருந்து பழமொழிகளில் ஆண், பெண் என்ற பொருளில் பொதுவாகத் தொகுத்தேன். இந்த 500-ம் ஆண் உடல், பெண் உடல் குறித்துப் பொதுவாகப் பேசுவதாக அமைந்துள்ளன. இவற்றில் ஆண் உடல், பெண் உடல் குறித்து அணுக்கமாகப் பேசும் 50 பழமொழிகளை மட்டும் தனியாகப் பிரித்தேன். இந்த 50-ல் ஆணுடல் குறித்து 16-ம், பெண்ணுடல் குறித்து 2-ம் அமைந்தன. மீதமுள்ள 36 பழமொழிகள் ஆண், பெண் உடலைப் புறநிலையில் (அழகு, செல்வம்) வைத்துப் பேசுவதாக அமைந்தன. இதில் ஆணின் அதிகார மையத்தைக் கட்டுடைக்கின்ற, விமர்சனத்திற்குள்ளாக்குகின்ற பழமொழிகள் காணப்பட்டது என்னை வியப்பிற்குள்ளாக்கியது. இந்த வியப்பே இக்கட்டுரை உருவாகக் காரணமாக அமைந்தது.

பெண் என்பதற்கு ஏற்கனவே நிர்ணயித்துள்ள அர்த்தங்களை கொட்டிக் கவிழ்க்க வேண்டும். பெண்ணைப் பற்றிய மரபார்ந்த புனைவைத் தகர்த்து ஒரு புதிய பார்வையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும்"1 என்பதான பின் நவீனத்துவத்திற்குள் பெண்ணியம் இன்று வந்து சேர்ந்துள்ளது. இக்கட்டுரை நாட்டுப்புற வழக்காறுகளில் ஒன்றான பழமொழிகள் ஆணின் அதிகார மையச் சிந்தனைக்கு எவ்வாறு அடித்தளமிட்டுத் தருகின்றன என்பதையும் மேலும் இதே பழமொழிகள் ஆணின் அதிகார மையத்தை உடைக்கும் கலகப் பிரதிகளாக எவ்வாறு அமைகின்றன என்பதையும் முறைப்படுத்தி விளக்குவதோடு பெண்ணியத்திற்கான உரையாடலாக அதாவது பெண் மொழிகளாகப் பழமொழிகள் எவ்வாறு அமைகின்றன என்பதையும் கோடிட்டுக் காட்ட முயல்கின்றது.

ஆணின் அதிகாரம் கட்டமைக்கப்படுதல்

பெண்ணின் மீது ஆணின் மேலாண்மை என்பது தந்தை வழிச்சமூகத்திலிருந்து தொடங்குகின்றது. இங்குக் குடும்பம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் ஆண்கள் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பெண்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தந்தை வழிச் சமுதாயம் என்பது வன்முறையாலேயே காக்கப்பட்டுள்ளது (ஆயiவேயiநேன லெ எiடிடநnஉந). ஆண்கள் தங்களுடைய சக்தியையும், மேலாண்மையையும் நிலைநிறுத்திக் கொள்ள பெண்களை வன்முறைக்கு ஆளாக்குகிறார்கள் என்று கருதப்படுகிறது.2

"ஆண் பெண்ணுக்காகப் படைக்கப்படவில்லை. ஆனால் பெண் ஆணுக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றாள் என்பது கற்பிக்கப்பட்டது. இந்தியா, சீனா போன்ற நாடுகளிலும் பெண் செயலற்றவளாக நிற்கும் கொடுமை நிகழ்ந்தது. கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பறிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவளாக ஆண் காப்பாளரால் திருமணம் செய்து தரப்பட்டாள். திருமண விலக்கும் ஆண்களுக்கு மட்டுமே என்றாயிற்று. பெண்கள் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

கட்டுப்பாடுகள் தீவரப்படுத்தப்பட்டன. தமது உடம்பின் மீதான கட்டுப்பாட்டு உரிமையையும் தமது குழந்தைகளின் மீதான உரிமையையும் கூட பெண்கள் இழக்க நேரிட்டது. படிப்படியாகச் சொத்துரிமையினையும் இழந்தனர். "மௌனமாய் இருப்பவளே சிறந்த மனைவி" என்ற பழமொழி அநேகமாய் எல்லா மொழியிலும் காணப்படுகின்றது."3

இங்கே "மௌனமாக இருப்பவளே சிறந்த மனைவி" என்ற கருத்து ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இதைப்புரிய பூகோ தரும் விளக்கம் சரியாக அமையும். ஆதிக்கச் சக்திகள் தங்களின் அதிகாரத்தை தொடர்ந்து பராமரிக்க மனிதரை, பால் பொருளாதாரம், இனம், பிறப்பு, உணவு ஆகியவற்றின் அடிப்படையில் தரம் பிரிக்கின்றனர். ஒரு ஆதிக்கப் பண்பாடு வித்தியாசங்களை எதிர்ச்சக்திகளுக்கு ஒதுக்கி அதன் மூலம் முதலில் தன்னைத் தக்க வைக்கிறது. பிறகு பாகுபடுத்தும் சடங்கு, சுத்த சடங்கு, விலக்கி வைக்கும் சடங்கு என்பனவற்றின் மூலமாக எதிர் இணைகளில் இருக்கின்ற ஒரு சாரரை வலுவாகக் கண்டிக்கிறது.4 என்று பேசிச் செல்வதை ஆண்கள் பெண்களுக்கு எதிராக உருவாக்கி வைத்திருக்கின்ற கட்டமைப்புகளில் இருந்து நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

"பொம்பள சிரிச்சாப் போச்சு

புகையில விரிச்சாப் போச்சு"

"பெண் புத்தி பின் புத்தி"

"உண்டி சுருங்கல் பெண்டிருக்கு அழகு"

என்ற இந்த நாட்டுப்புற பிரதிகள் தமிழ்ப்பண்பாட்டில் பிரசித்தமானது. இதன் உட்கிடை பெண்ணின் உடலை ஒரு கட்டுக்குள் அதாவது அடக்கமாக அல்லது அழகாக வைத்திருத்தல் என்பதான பொருளில் சொல்லப்பட்டாலும் அது ஆணுக்கு ஒரு வகையில் பெரிதும் நன்மை தருகின்ற பிரதிகள். எப்படியென்றால் ஆண் உடல் எப்படி இருந்தாலும் அழகானது என்ற ஒரு கருத்தியல் இப்பிரதிக்குள் திணிக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ள முடியும். அவனுக்கென்ன ஆண்பிள்ளை என்ற சொல்லாடல் ஆணுக்கான அதிகாரத்தை எல்லா நிலையிலும் உறுதிப்படுத்திக் கொண்டே இருப்பதை நாம் இங்கே நினையலாம். மேலும் ஆணின் மொழி, பெண் உணவு உண்ணுதல் விசயங்களில் கூட அதிகாரம் செய்கிறது என்பதையும் இப்பிரதி காட்டி நிற்கிறது.

இதன் மூலமாகப் பெண்ணை உடலியலாலும், உளவியலாலும் ஒடுக்குதலைச் செய்து அவளைத் தனக்குக் கீழ்ப்பட்டவளாக, கட்டுப்பட்டவளாகத் தன் ஆளுகைக்கு உட்பட்டவளாக ஆக்கிக் கொள்ள, ஆண் தொடர்ந்து மொழியின் வாயிலாகப் பெண்ணைக் கட்டமைக்க முயல்வதைப் பார்க்க முடியும். அதே நேரத்தில் தனக்கான கட்டமைப்பை அவன் செய்கையில் தான் எல்லையற்ற அதிகாரம் படைத்தவன், வலிமையானவன் என்று எல்லா இடங்களிலும் கட்டமைக்க முயல்வதையும் பழமொழிகளில் பார்க்க முடிகிறது.

"ஜான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை"

"ஆண் அருக்கங் கொடிபெண் பீர்க்கங்கொடி"

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

"ஆண் மூலம் தரணியாளும் பெண்மூலம் நிர்மூலம்"

"அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்துக்கு ஒரு ஆணும்"

என்றவாறு தனி நிலையிலும், பெண்ணோடு இணைத்துச் சொல்லும்போது ஆண் தன்னைப் பெண்ணிடமிருந்து மற்றொன்றாக வடிவமைப்பதில் மிகக் கவனமாக இருப்பதைப் பார்க்க முடியும். மேலே சொன்ன அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்துக்கு ஒரு ஆணும் என்னும் பழமொழி பெண் அடுக்களையிலிருந்து கொண்டு வீட்டு வேளை செய்வதற்கு மட்டுமே ஆனவள் என்றும், ஆண் வீட்டுக்கு வெளியே சமூகத்தளத்தில் அதிகாரம் செய்யும் இயல்புடையவன் என்பதை உணர்த்தவும் பயன்படுத்தும் கருத்தாடல் ஆகும். ஆண் அதிகாரம் உடையவன் என்பதையே அம்பலத்துக்கு (அதிகாரம்) ஒரு ஆணும் என்பதாக பழமொழி பதிவு செய்கிறது. தென் மாவட்டங்களில் அம்பலம் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை ஆட்சி செய்ய அமைக்கப்பட்ட ஒரு குழுவின் பெயராகும். இதனால் அம்பலம் என்ற சொல் ஆணின் அதிகாரத்தைக் குறிப்பதாக இங்கு அமைந்துவிடுகிறது. இவ்வாறு ஆணின் அதிகார மையத்தை பெண்ணின் மீது கட்ட முயலும் பல பிரதிகளை பின்வருமாறு காணலாம்.

ஆணால் (மற்றமையால்) கட்டமைக்கப்பட்ட பெண்

"மனிதன் தனக்கான அடையாளத்தைக் கட்டமைக்கின்றான். அதற்கான சுதந்திரம் அவனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற ஸார்த்தர் கருத்தை விமர்சிக்கும் சீமோன், திபுவா, மனிதன் என்று பொதுவாகச் சொல்கிறார் ஸார்த்தர். அப்படியென்றால் பெண்ணின் நிலை என்ன? ஆண்கள் தங்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தை மட்டும் உருவாக்கிக் கொள்வதில்லை. ஒரு ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களுக்கான அர்த்தத்தையும் ஆண் தான் உருவாக்குகின்றான்."4 என்று பேசுவது பெண்ணியல் நோக்கில் அர்த்தம் நிரம்பியவை. ஆண் தனக்கான அடையாளத்தை மட்டும் கட்டவில்லை. தன்னுடன் சேர்ந்து வாழும் எதிர்ப்பாலினமான பெண்ணுக்கான அடையாளத்தையும் சேர்த்தே கட்டுகின்றான். இது ஒரு வகையில் ஆணுக்கான அதிகாரத்தையும் பெண்ணிடமிருந்து பெற்றுத்தந்துவிடுகின்றது என்றும் சொல்லலாம். "பெண் புத்தி; பின்புத்தி" எனும் போது பெண்ணால் எந்தவொன்றின் மீதும் சரியான முடிவெடுக்க முடியாதவள் என்ற கருத்து அதிகாரப்படுத்தப்படுவதோடு ஆண்தான் முடிவெடுப்பதில் உறுதியானவன் என்பதை இப்பிரதி ஆணுக்குப் பெற்றுத் தந்துவிடுகின்றது. இவ்வாறாகப் பெண்ணுக்கெதிராக அவளை பலவீனப்படுத்தும் பல உரையாடல்கள் (னுளைஉடிரசளந) நாட்டுப்புற வழக்காறுகளில் நிறைய உண்டு. இதில் பழமொழிகள் நேருக்குநேராக கருத்துச் சொல்லும் பான்மையுடையது. இதனால் இவை சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது கூட உரையாடல் வடிவிலேயே பேசுவோர் பெண்ணுக்கெதிராகப் பயன்படுத்திவிட முடிகிறது. அதாவது அதிகாரப்படுத்திவிட முடிகிறது. பொருள் புரியவில்லை என்ற கருத்து நிலைப்பாட்டிற்கு இங்கு இடமில்லை. வழக்காறு என்பது ஒரு குறிப்பிட்ட மனநிலையின் புறவெளிப்பாடாகும். அவ்வகையில் பெண்ணுக்கெதிராக வழக்கில் உள்ள வழக்காறுகள் ஆணாதிக்க மனநிலையின் (அதிகாரம்) வெளிப்பாடாகவே பெரிதும் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் பழமொழிகள் வலியுறுத்தி நிற்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

'பெட்டைக் கோழி தட்டிக் கூவுமா'

'பெட்டைக் காக்காய் எட்டிக் கொத்தாது'

இப்பழமொழிகள் தரும் நேர்பொருள் சரியானது அல்ல, எப்படியென்றால் பெட்டைக் கோழியின் இயல்பு கூவுதல் செய்தல் அல்ல, அது முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்து தன் இனம் பெருக்க வாழ்வது. இங்குக் கோழியின் சுயம் அதாவது இயல்பு (அடையாளம்)

மறுக்கப்பட்டு எதிர்நிலையில் சேவலின் கூவும் தன்மையைப் பெட்டைக் கோழியோடு தொடர்புபடுத்தி, பெண்ணை பலவீனமானவளாகக் காட்ட இப்பிரதி முயற்சிக்கின்றது. அதிகாரம் இப்படித்தான் கோணலானதைக் கூடச் சரியென்று சொல்லும். இதேபோன்றுதான் "பெட்டைக் காக்காய் எட்டிக் கொத்தாது" என்பதிலும் உண்மை இல்லை. ஆண் காகம் தான் எட்டிக் கொத்தும் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. இன்னும் சொல்லப்போனால் பார்ப்பவர் கண்களுக்கு ஆண் காகம் பெண் காகம் என்று தனித்து அடையாளப்படுத்திட தடயங்கள் அங்கு எதுவுமில்லை. ஆனால் இது போன்ற மொத்தம் பொதுவான பழமையானக் கருத்துக்கள் நம் பண்பாட்டில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அண்மைக் காலம் வரை மேற்சொன்ன பிரதிகளுக்கு மாற்றுக் கருத்துச் சொல்லும் கருத்துத் தளம் உருவாகியிருக்கவில்லை. ஆனால் இன்று, ஏன் பெட்டைக் காக்கா எட்டிக் கொத்தாது என்றும், சேவல் முட்டையிடுமா? என்றும் எதிர்க்கேள்வி கேட்கும் அறிவுத் தளம் பெண்களிடம் உருவாகியுள்ளது. இது போன்ற பல கருத்துக்களை பெண்களுக்கு எதிராக ஆண் சமூகம் உருவாக்கி வைத்திருக்கிறது. இவற்றில் ஆண் சார்ந்தவளே பெண், பெண் வீட்டுக்கு மட்டுமே ஆனவள், பெண் பலவீனமானவள், பெண் அழகானவள், பெண் அடக்கமானவள், பெண் தெய்வீகமானவள் என்பன போன்றவை குறிப்பிடத்தக்கன. இதற்குச் சான்றாக அமையும் பழமொழிகள் வருமாறு.

ஆண் சார்ந்தவளே பெண்

'ஆடு மிதியாக் கொல்லையும்

ஆளன் இல்லாப் பெண்ணும் வீண்'

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்'

'ஆளன் இல்லாத பெண்ணுக்கு அழகு பாழ்'

'காவல் தானே பாவைக் கழகு'

'ஆளன் இல்லாத பெண்ணுக்கு வாழ்வு இல்லை'

'அரசன் இல்லா நாடு புருசன் இல்லா வீடு'

'அறுத்தா அப்பன் வீடு, பொழைச்சா புருசன் வீடு'

'நாட்டுக்கு அவள் ராணியா இருந்தாலும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

வீட்டுக்கு அவள் பெண்டாட்டிதானே'

'இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதானே'

'அடிச்சாலும் புருசன் அணைச்சாலும் புருசன்'

வீட்டுக்கு மட்டுமே ஆனவள்

'அகத்துக்கு அழகு அகமுடையாள்'

'வாழ்கிற வீட்டிற்கு ஒரு பெண்ணும்

வைக்கோற் போருக்கு ஒரு கன்றும்'

'பெண்டுகள் சமர்த்து அடுப்பங் கரையிலே'

'அடுக்களையே திருப்பதி, ஆம்படையானே கோயில்'

பெண்ணுக்கு அழகு அடக்கம்

'நாணம் இல்லாத பெண் நகைப்புக்கு இடம் வைப்பாள்'

'அடக்கமுடைய பெண்ணுக்கு அழகு எதற்கு'

'பெண்ணுக்கு அழகு எதிர் பேசாதிருத்தல்'

'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன்'

'அடக்கமற்ற பெண் அவிந்து போன கண்'

'ஆண் அடங்கிக் கெட்டது பெண் பேசிக் கெட்டது'

தெய்வீகத் தன்மை கொண்டவளாக

'மங்கிலியப் பெண்ணுக்கு மாதமொரு பூசை'

பலவீனமானவளாக

'ஓர் உழவு உழுதாலும் உழவு

ஒரு புள்ளப் பெத்தாலும் கிழவி'

'தளுக்குப் போச்சு மினுக்குப் போச்சு

தலைப் புள்ளையோட

முகத்தில் உள்ள பவுசும் போச்சு

மூனாம் புள்ளையோட'

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

'குமரியா இருக்கையில் கொண்டாட்டம்

கிழவியா இருக்கையில் திண்டாட்டம்'

மேற்கண்டவாறு கட்டமைக்கப்பட்டுள்ள பெண் குறித்த புனைவு பெண்ணின் நோக்கில் பார்த்தால் சரியானது என்று சொல்லிவிட முடியாது. இவையனைத்துமே ஆணால் உருவாக்கப்பட்ட பெண் மீதான புனைவுகளே அல்லாமல் வேறில்லை. இப்புனைவுகள் எல்லாம் கருத்து வடிவில் பண்பாட்டுத்தளமாக மாற்றப்பட்டு பெண்ணுக்குள் அவள் அனுமதி இல்லாமல் இறக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்துக்களே பெண்ணைச் சமூகம் சார்ந்தவளாக வடிவமைக்கிறது என்றும் சொல்லிவிட முடியும். இப்பிரதிகளை உருவாக்கிய ஆணாதிக்கச் சமூகத்தின் விருப்பம் என்னவென்பது சொல்லாமலேயே விளங்கிவிடும். அது ஆணுக்குள் பெண் அடக்கம், ஆணைச் சார்ந்து வாழ்பவள்தான் பெண்,

அவளுக்கென்று தனியான சிந்தனை இல்லை, வாழ்க்கை இல்லை என்பதுதான். இதனை பூக்கோவின் கருத்து வெளிச்சத்தில் நாம் தெளிவு பெற முடியும். "ஆதிக்கம் என்பது நேரடியாக உடல் தொடர்புடையது. ஆதிக்க உறவுகள் உடலின் மீது நேரடி, உடனடி ஆட்சி உடையவை, அதை (உடலை) முதலிடுகின்றன, பயிற்சி தருகின்றன, வதைக்கின்றன, கடமையாற்றும்படி கட்டாயப்படுத்துகின்றன."5 என்பதில் எல்லா விளக்கமும் நமக்குக் கிடைத்துவிடுகின்றன. பழமொழிகளில் நிகழ்த்தப்படும் கருத்தாடல் பெண்ணின் உடலை ஆணுக்கு அடங்கியதாக உருவாக்குவதில் பெரிய கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். பெண்ணின் உடல் ஆணின் மனநிலைக்கேற்ப, நுகர்வுக்கேற்ப எப்பொழுதும் அழகாக இருக்க வேண்டும் என்ற வேட்கையின் பிரதியே,

"ஓரு உழவு உழுதாலும் உழவு

ஒரு புள்ளப் பெத்தாலும் கிழவி"

என்பதாகும். இங்கு பெண் உடல் ஆணுக்கான நுகர்வுப் பொருளாக மட்டுமே பார்க்கப்படும் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்படக் காண்கிறோம். இது போன்ற உரையாடல்கள் பிள்ளைப்பேற்றுக்குப் பின்னால் பெண்ணுடல் கவர்ச்சியற்றது என்ற கருத்தை பெண்ணுக்குள்ளும் ஏற்படுத்தி வைத்துவிடுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

"தளுக்குப் போச்சு மினுக்குப் போச்சு

தலைப் புள்ளையோட

முகத்தில் உள்ள பவுசும் போச்சு

மூனாம் புள்ளையோட"

போன்ற பழமொழி எல்லாம் இதனை அடியொட்டியதே. இதற்கு மாறாக ஆணுடல் எப்பொழுதும் மாறாத அழகுடையதா? என்ற கேள்விக்கு ஆணிடம் பதில் இருக்காது. ஏனென்றால், அவன் அதிகாரம் செலுத்துபவன்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

ஆனால் இதற்கான விடையைப் பெண்ணிடமிருந்து தேட வேண்டும். அப்படித் தேடுகையில் ஆண் எனும் அதிகார மையத்தை உடைத்து விமர்சனம் செய்கிற பல பிரதிகளை நாம் பழமொழிகளிலும் பெற முடிகிறது. இந்த எதிர்க்குரலை பெண்ணின் கலகச் சிந்தனை என்று இன்றைய நவீனப் பெண்ணியம் அடையாளப்படுத்தப்படும். பின் அமைப்பியல் இதைக் கட்டுடைதல்) என்று கொண்டாடும். பின் நவீனத்துவம் இதனை அதிகார மையத்தை உடைத்தல் என்று அங்கிகாரம் அளிக்கும். இந்தக் கட்டுடைத்தலைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

அதிகார மையம் கட்டுடைப்பு

ஆண் கதையாடலால் கட்டமைக்கப்பட்ட பெண் எப்படிப்பட்டவள் என்பதை மேலே காட்டிய பழமொழிகளின் பிரதிகள் நமக்குள் ஒரு ஓவியம் போல் வரைந்து காட்டும். அவள் எப்படியானவள். "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பதோடு ஆணுக்குக் கட்டுப்பட்ட கட்டுப்பெட்டியே பெண்" என்பது ஆணின் மொழி குறியீடாக்கும் பெண் ஆவாள். ஆனால் ஆண் உருவாக்கி வைக்க முயலும் பெண் இப்படியான யதார்த்தத்தில் இல்லை என்பதே உண்மை. "எதிர் பேசாதிருத்தல் பெண்டிருக்கு அழகு" என்று ஆண் கருத்துருவாக்குகின்றான். நிஜ வாழ்க்கையில் அப்படியான பெண் இருக்க வாய்ப்பில்லை என்பதே உண்மை. "அடிச்சாலும் புருஷன் அணைச்சாலும் புருஷன்" என்பதும், "அடிக்கிற கைதான் அணைக்கும்" என்பதும், "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் " என்பதும், "ஆளன் இல்லாப் பெண் வீண்" என்பதும் ஒரு வகையில் "ஆண் எனும் அதிகாரத்திற்குள் பெண்" என்பவள் ஒரு நுகர்வுப் பொருளாக மட்டுமே பார்க்கப்படுகின்றாள் என்பதையே காட்டுகிறது. பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரையில் தான் , அரசன் இல்லா நாடு புருஷன் இல்லா வீடு என்றெல்லாம் பெண்ணை ஆணுடன் மட்டுமே இணைத்துச் செயல்பட வைக்கும் ஆணின் அதிகாரம் உண்மையில் நிலை பெற்றுள்ளதா? என்றால் இல்லை என்றே சொல்லிவிட முடியும். பெண்ணுக்கு ஒழுங்கு கற்பிக்கும் ஆணின் அதிகார ஒழுங்குகளைப் பெண்ணியம் கட்டுடைக்கின்றது. எல்லா ஒழுங்குகளையும் அவை கட்டவிழ்க்கின்றன. ஏனெனில் எல்லா ஒழுங்குகளும் ஏதோ ஒரு அடக்குமுறையை மறைத்துக் கொண்டே அமைகின்றன என்ற þயோதார்த் கருத்தைப் பெண்ணியம் தனக்கானதாகவும் ஏற்றுள்ளது. ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண் தன்னை அதிகாரத்தின் மையமாக ஆக்கிய போது பெண்ணை மற்றமையாக விளிம்பு நிலைக்குத் தள்ளிவிடுகின்றான். விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் வரலாறு அற்று வார்த்தையற்று அடையாளமற்றவர்களாக ஆக்கப்பட்டுவிடுகிறார்கள். இந்தக் கருத்துப் பெண்களுக்குப் பொருந்துவது போன்று தலித்துகளுக்கும் (அடித்தள மக்கள்) பொருந்தும். இந்த அதிகார மையம் தனக்கான அடையாளத்தை வார்த்தைகளால் (மொழி)தான் உருவாக்குகின்றது. இவ்வாறு வார்த்தைகளால் உருவாக்கப்படும் கருத்து மையம் அந்தந்த மையங்களுக்கான கருத்தின் இலச்சினையாக இருக்கிறது. அந்தக் கருத்து இலச்சினைக்குத் தான் லோகோ சென்டிரிசம் (டுழபழ ஊநவேசளைஅ) என்று பெயர். அந்தந்த மையங்களுக்கான இலக்கியங்களும் தத்துவங்களும் அந்தந்த மையங்களின் லோகோ சென்டிரிசம் (டுழபழ ஊநவேசளைஅ) எனப்படும்.6

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன " - என்பதும்

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறத்த

நிச்சமும் பெண்பாற் உரிய என்ப - என்பதும்

ஆண், பெண் இருவருக்கும் தொல்காப்பியர் உருவாக்கித் தரும் இலச்சினை ஆகும். இதை அடையாளம் என்றும் நாம் புரிந்து கொள்ளலாம். ஆக மொழி அமைக்கும் அதிகாரத்தை அந்த மொழியைக் கொண்டு தகர்க்க முடியுமென்று பின் அமைப்பியல் நம்பியது. இதனைப் பின் நவீனத்துவம் தனக்கானதாக எடுத்து அதிகாரத்தைத் தகர்ப்புச் செய்து மறுகட்டமைப்பு செய்ய முடியும் என்று நம்பியதைப் போன்று, நவீனப் பெண்ணியமும் தனக்கான அடையாளத்தைக் கட்டமைக்க முடியும் என்று முயன்று வருகின்றது என்றாலும், இம்முயற்சி எல்லாக் காலத்திலும், எல்லா நிலையிலும் குறிப்பாக உழைக்கும் மக்களின் வாய்மொழி இலக்கியத்தில் கூட இருந்து வந்திருப்பது வியப்பளிக்கக்கூடியது. ஒரு பிரதிக்கு ஒரு அர்த்தம் மட்டுமே இல்லை, எப்போதும் பல அர்த்தங்கள், இருப்பதே இயல்பு என்ற பின்-அமைப்பியல் கருத்தின்படி பார்த்தால் பல மொழிகளில் பல அர்த்தங்கள் ஏன் உருவாக்கியவர்களுக்கே எதிரான அர்த்தங்களும் இருக்கவே செய்கின்றன. "காலுக்குப் பத்தாத செருப்பை கழற்றித்தானே ஆகனும்." என்ற பிரதி பெண்ணுக்கு எதிரான ஓர் ஆணாதிக்கப் பிரதி போல அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் பெண் ஆணுக்கு எதிராகவும் இப்பழமொழியை அர்த்தப்படுத்திவிட முடியும். இப்பழமொழி ஆணுக்கு எதிரானதாக ஆணின் அதிகார மையத்தை (ஞடிறநச உநவேசந) உடைக்கும் கருத்தாடலாக பெண்ணின் இடத்தில் இருந்து ஆண்களே ஆணுக்கு எதிராகப் பயன்படுத்தியதைக் கேட்டேன்.7 அச்சூழல் பின்வருமாறு அமைகிறது.

எனது கிராமத்தில் கணவன் - மனைவி பிரச்சனை தொடர்பான பஞ்சாயத்து ஒன்று நடந்தது. அதில் கணவன்தான் புகார்தாரர். புகார் இதுதான் மனைவி தன்னுடன் மகிழ்வாக இல்லை. இதனால் அடிக்கடி சண்டை ஏற்படுகின்றது என்பது கணவனின் குற்றச்சாட்டு. பஞ்சாயத்தார் மனைவியிடம் கருத்துக் கேட்க ஒரு வழி செய்தனர். ஒரு வயதான பெண்ணை அப்பெண்ணிடம் காரணம் கேட்கச் சொன்னார்கள்.

அப்பெண் ஒரு மணிநேரத்திற்கு மேல் அப்பெண்ணிடம் பேசிய பின் பஞ்சாயத்தாரிடம் வந்து சொன்ன செய்தி இதுதான். ஒன்னுமில்லீங்க காலுக்கு பத்தாத செருப்பைக் கழட்டி விட்டுட்டா நல்லதுதாங்க என்றார் அந்த முதிய பெண்.

ஒன்னும் விளங்கலியே, ஏம்பா! ஓம் பொண்டாட்டிக்கிட்ட ஏதாச்சும் குறை இருக்குதா என்றார்கள் பஞ்சாயத்தார். அவர் அப்படி ஏதும் இல்லை என்றார்.

அதன் பின்பு அந்த வயதான பெண்ணே குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணுக்காகப் பேசினார். நமக்குத் தெரியாதது ஏதும் இல்லை என்று பேசியவர். "கிணறு ஆழம் கயிறு கட்டை" என்ற ஒரு பழமொழியைச் சொல்லி எல்லோரையும் அதிரச் செய்தார். பஞ்சாயத்தார் மவுனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மீண்டும் ஒரு பழமொழியைச் சொன்னார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

அது, "பல்லுக்கு பத்தாத வெத்தலையும் படுக்கைக்குப் பத்தாத புருஷனும் அமைஞ்சா என்ன செய்றது" கழட்டி விட்டற வேண்டியதுதானே என்று பேசினார்.

இதன் பின்பு தீர்ப்புச் சொல்லப்பட்டது. இருவரையும் பிரித்து வைத்து தீர்ப்புச் சொல்லுகிறோம். அவுங்க விருப்பப்படி அவங்களுக்குத் தோதான ஒருவரைக் கல்யாணம் செஞ்சுக்கலாம், என்று தீர்ப்பு அமைந்தது. இங்குச் சொல்லப்பட்ட இந்தப் பிரதி அதாவது பல்லுக்குப் பத்தாத வெத்தலை என்பது ஆணின் அதிகாரத்தை உடைக்கும் கலகக் குரல், இது அதன் தளத்தில் மிக வலிமை மிக்கது. இது போன்ற பல கலகக் குரல்கள் ஆணுக்கு எதிராக வழக்கில் உள்ளன. எடுத்துக்காட்டாக,

"ஆள மாட்டதவனுக்கு பொண்டாட்டி எதுக்கு "

"கெட்டிக்காரன் பொண்டாட்டி

எட்டுப் பேருக்கு வெப்பாட்டி "

"நியாயக் காரன் பொண்டாட்டி

நாலு பேருக்கு வெப்பாட்டி"

என்பதெல்லாம் ஆணின் அதிகாரத்திற்கு எதிரான அடையாளங்கள் நிறைய உள்ளன என்பதைக் காட்டுவதாகும். இன்னும் சொல்லப்போனால் ஆண் எனும் அதிகார மையத்தைக் கட்டுடைத்து, தலைகீழாக்கிப் போடும், அதிகாரத்திற்கு எதிரான உரையாடல்கள் இவைகள் என்றும் சொல்லிவிடலாம்.

தொகுப்புரை

எழுத்து வடிவ இலக்கியங்களில் வெளிப்படும் பெண் மொழியை விட, கூர்மையான நேரடியான பெண் மொழியை நாட்டுப்புற வழக்காறுகள் பதிவு செய்து வைத்திருக்கின்றன என்பதை இக்கட்டுரை அறிமுகம் செய்து வைக்க முயன்றுள்ளது.

பழமொழிகளின் நேரடித்தன்மை ஆணாதிகாரத்தின் அதிகாரக் குரலைக் கட்டமைக்க வசதியான பிரதியாக அமைந்துள்ளது என்றும் சொல்லலாம்.

ஆணின் அதிகார மையம் பெண்ணைத் தனக்கு அடங்கியவளாக, பலவீனமானவளாகக் கட்டமைக்க முயல்கின்றது. ஆனால் இதனைப் பெண் மொழி நேருக்கு நேராய் போட்டு உடைத்துத் தலைகீழாக்கிவிடுகின்றது என்பதை இக்கட்டுரை சுட்டுக்காட்டியுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

குறிப்புகள்

1.சுரேஷ், எம்.ஜி., பின்-நவீனத்துவம் என்றால் என்ன?, புதுப்புனல், 32\2 ராஜிதெரு முதல்மாடி, அயனாவரம், சென்னை-23, ப.123.

2.பிரேமா, இரா., பெண்ணியம், தமிழ்ப்புத்தகாலயம், தி.நகர் பாண்டி பஜார், சென்னை, ப-90.

3.இராதாகிருஷ்ணன்.வி., (தமிழாக்கம்) உலக வரலாற்றில் பெண்கள், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -98, முகவுரை

4.சுரேஷ், எம்.ஜி., மேலது, ப-98

5.பூரணச்சந்திரன்.க., அமைப்பு மைய வாதமும் பின்-அமைப்பு வாதமும், நிகழ், காளீவரர் நகர், கோவை, ப-113

6.சுரேஷ், எம்.ஜி., மேலது, ப-76